1A-65
A/B.

# அம்பாறை மாவட்ட தமிழர்களின் சுபீட்சம் முஸ்லிம்களின் கரங்களைப் பலப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது

கௌரவ அமைச்சர் - எம்.எச்.எம். அஷ்ரஃப் எம்.பி.



**Published by:**

**Sri Lanka Muslim Congress**
**Dharussalam, Vauxhall Lane, Colombo 2**

**Typeset & printed by Crescent Publications (Pvt) Ltd. 119, Justice Akbar Mawatha, Colombo 2**

# அம்பாறை மாவட்ட தமிழர்களின் சுபீட்சம் முஸ்லிம்களின் கரங்களைப் பலப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கப்பல்போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சகோ.எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் "தமிழ்பபிரதேச அபிவிருத்தி" தொடர்பாக சமீபத்தில் அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் ஆற்றிய உரை.

## தமிழ் - முஸ்லிம் உறவு! காலத்தின் தேவை!!

இன்றைய நாள் என்னைப் பொறுத்தளவில் மிகவும் சந்தோஷமான நாளாகும். ஏனெனில், தமிழ், முஸ்லிம் உறவுக்கு அடித்தளமாக இருக்கின்ற அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநிதிகளும் முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒரே கூரையின் கீழ் அமர்ந்திருப்பது இன்றைய வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். மாத்திரமல்ல, இது இன்றைய காலகட்டத்தில் ஒரு வரலாற்றுத் தேவையுமாகும்.

## அந்த நாள்!

இன்றைய இச்சந்திப்பு எனக்கு 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தை ஞாபகப்படுத்துகின்றது. அன்றுதான் நான், கல்முனையை விட்டு இரவோடு இரவாக உடுத்த உடையுடன் வெளியேறிய நாளாகும். அன்று அத்தகைய வெளியேற்றம் தொடர்பாக நான் எடுத்த முடிவு எனது மனச்சாட்சியை அடகு வைக்க முடியாத சூழ்நிலையில் எடுத்த ஒன்றாகும்.

## தமிழ் சகோதரர்களுடன் தொடர்பு.

நான் மிக நீண்ட காலமாகத் தமிழ் சகோதரர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தேன். மாத்திரமன்றி, எனது நண்பர்களில் அதிகமானோர் இன்றும் அவ்வாறே இருக்கின்றனர். மேலும் கல்முனையிலே பல சௌகரியமான விசாலமான இடங்கள் இருந்தும் எனது வசிப்பிடத்தைக் கூட, தமிழ் சகோதரர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற அம்மன் கோவில் வீதியிலேயே அமைத்திருந்தேன்.

## அன்றைய 'அரசியல் வியாபாரிகள்'.

இவ்வாறு தமிழ் சகோதரர்கள் மத்தியிலே தொழில் ரீதியாகவும், பொது நடவடிக்கைகள் ரீதியாகவும் பெரும் நன்மதிப்பைப் பெற்றிருந்த என்னை, தமிழ் மக்களிடமிருந்து பிரிக்க வேண்டுமென்று அன்றைய 'அரசியல் வியாபாரிகள்' திட்டம் தீட்டினர். இந்தத் திட்டத்தின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியாமல், அப்போது அவ்வரசியல்வாதிகளுக்கு சாமரம் வீசிய சில சகோதரர்களின் அந்த செயற்பாடுகள் என்னை வேதனையடையச் செய்தன.

## தற்காலிக வெற்றி!

தமிழ் மக்களிடமிருந்து என்னை அந்நியப்படுத்த வேண்டுமென முயற்சி செய்த அந்தத்துரோகத்தனமான அரசியல்வாதிகள் அன்றைய சூழ்நிலையில் தற்காலிக வெற்றியைக் கண்டார்கள். இந்த நிகழ்வுகளின் பின்னணியில் எமது புதிய அரசியல் பாதை ஆரம்பமானது.



நீர், மின்சாரம், பாதை, பாடசாலை, கோயில், சந்தை மற்றும் அனைத்து அடிப்படைத் தேவைகளுடன் கூடிய மீளக் குடியமர்வு மாதிரிக் கிராமம் ஒன்றினை திறந்து வைத்த கௌரவ அமைச்சர் அவர்கள் கிராமத்தவர்களுக்கு மரச் செடிகளை வழங்குகின்றார்.

## எனது பாதை!

நான் வகுத்துக் கொண்ட அரசியல் பாதை தமிழர்களுக்கு எதிரான அரசியல் பாதை அல்ல. தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் அரசியல்பாதையும் அல்ல. தமிழர்களின் போராட்டத்தை மலினப்படுத்தும் அரசியல் பாதையும் அல்ல. தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினரான முஸ்லிம்கள், இந்த நாட்டில் அரசியல் மயப்படுத்தப்பட வேண்டும். அதனூடாக அவர்களது உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும். இதற்கு மேலாக தமிழ்பேசும் தமிழ் சமூகமும், தமிழ் பேசும் முஸ்லிம் சமூகமும் ஒற்றுமைப்பட்டு பேரினவாத சக்திகளுக்கெதிராக போராட வேண்டுமென்ற இலக்குடனே எனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தேன்.

## பொறுப்பு!

அதன் பின்னர் பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த

மாற்றங்களின் காரணமாக வட, கிழக்கு முஸ்லிம் சமுதாயத்தின் வேதனைகளுக்கும், சோதனைகளுக்கும் தோள் கொடுக்க வேண்டிய பொறுப்பு முஸ்லிம் காங்கிரஸின் தலைவரென்ற ரீதியில் என்மீது சுமத்தப்பட்டது. அந்தச் சுமைகளுடன் நாங்கள் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவத்தைப்பற்றி மாத்திரம் சிந்திக்காமல், தமிழ் சமூகத்தின் அரசியல் அபிலாசைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளோம். அன்று முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பற்றிப்பேசிய போது, இது தமிழர்களுக்கெதிரான ஒரு கோஷமென்று அன்றைய அரசியல் வாதிகளினால் பிரசாரம் செய்யப்பட்டது.

## ஆத்மதிருப்தி!

ஆனால், இன்று முஸ்லிம்களின் தனித்துவம் தொடர்பான எமது அரசியல் பயணம் தமிழர்களுக்கெதிரானதல்ல என்று நிரூபிக்கப் பட்டதையிட்டு நான் ஆத்ம திருப்தியடைகின்றேன். இத்தகைய சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட வேண்டுமென நான் அயராது பாடுபட்டேன். உள்ளத்தாலும், உணர்வாலும் பல தடவைகள் இந்தத் துயர சம்பவத்தையிட்டு நான் வேதனையடைந்திருக்கின்றேன். இந்த மண்ணில் வாழுகின்ற தமிழர்களும், முஸ்லிம்களும் ஒரு கைகோர்த்து ஒன்றாக வாழ வேண்டுமென்பதற்காக நேற்றும், இன்றும், நாளையும் எனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றேன். இந்த இலட்சியத்தின் வெற்றியை உங்களின் முகங்களிலிருந்து என்னால் உணர முடிகின்றது.

## முஸ்லிம்களுக்கு உதவி புரிய.......?

இன்று நான் சந்தித்து பேசுவது அடுத்த தேர்தலில் எனக்கும் எனது கட்சிக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் அல்ல. அவ்வாறே, தமிழ்ப் பிரதேசங்கள் எனது அமைச்சினால் அபிவிருத்தி செய்யப்படுகின்ற போது, அதற்கு கைமாறாக தமிழ் மக்கள் எமக்கு வாக்களிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்பும் என்னிடம் இல்லை. ஆனால், அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களுக்கு உதவி புரிய வேண்டுமென்று எண்ணினால், அவர்கள் செய்ய வேண்டிய ஒரேயொரு பணி, அவர்கள் ஒற்றுமைப்பட்டு வாக்களிப்பதாகும். இத்தகைய ஒற்றுமை மூலம் தமிழ் சகோதரர்கள் அம்பாறை மாவட்டத்தில் தங்கள் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்வதோடு, தங்கள் இன்னுமொரு சகோதர சிறுபான்மை சமூகமான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் பாதுகாக்க முடியும். இந்தச் செய்தியை மாத்திரம்தான், நான் தமிழ் மக்களுக்கு விடுக்க விரும்புகிறேன்.

## தமிழ் மக்களுக்கு படிப்பினை!

கடந்த 1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் தமிழ் சகோதர்களுக்கு ஒரு படிப்பினையாகும். தமிழ் சகோதரர்கள் பிளவுபட்டு வாக்களித்த காரணத்தினால் அம்பாறை மாவட்டத்திற்குரித்தான தமிழர் பிரதிநிதித்துவத்தை இழந்ததோடு மாத்திரமன்றி, முஸ்லிம்களுக்கு உரித்தான பிரதிநிதித்துவத்தைப் பார்க்கிலும் அதிக பிரதிநிதித்துவம் பெற வாய்ப்பளிக்கப்பட்டது. இன்று அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாக மாற்றப்பட்டுள்ளனர். இத்தகைய துர்ப்பாக்கிய சம்பவங்கள் மீண்டும் எம் மண்ணில் இடம்பெறக்கூடாது. கண்ணை விற்று சித்திரத்தை வாங்குகின்றவர்களாக நாம் இருக்கக் கூடாது. தமிழ் சகோதரர்கள் இனிவரும் காலங்களிலாவது ஒற்றுமையுடன் வாக்களித்து தமது பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று மீண்டும் உங்களுக்கு வலியுறுத்துகின்றேன்.

## முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற நாமம் இந்த நாட்டில் ஒரு அரசியல் சக்தியாக இனங்காட்டப்பட்டதற்கு அடிப்படைக் காரணம், முஸ்லிம் சமுதாயத்தின் ஒற்றுமையாகும். இன்று உங்கள் முன் அமைச்சராக நான் பேசிக் கொண்டிருக்கிறேன் எனில் அதற்குக் காரணம் வெற்றிகரமாக கட்டியெழுப்பிய முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையே.

## தவிர்க்கமுடியாத சக்தி.

நாற்பது வருட காலம் இலங்கை அரசியலில் கறிவேப்பிலையாகப் பாவிக்கப்பட்ட முஸ்லிம் சமுதாயம், இன்று இந்த நாட்டின் அரசியலில் தவிர்க்க முடியாத சக்தியாக 1988ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும்,

1994ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலிலும் இந்த நாடு அறிந்து கொண்டது. ஒற்றுமை பற்றித்தான் நாங்கள் முஸ்லிம் மக்களிடம் பேசினோம்.

## தமிழ் முஸ்லிம் ஒற்றுமை.

இந்த ஒற்றுமையைப் பற்றிப் பேசி வெற்றிகண்ட நாம், அதற்கு அப்பால் இன்று நமது பிரதேசத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ், முஸ்லிம் சமூக ஒற்றுமைப் பற்றிப் பேச ஆரம்பித்துள்ளோம். இருசமூக ஒற்றுமையும் இந்த மண்ணில் பூரணமாக நிலை நிறுத்தப்படுமானால் இந்த நாட்டின் எதிர்கால அரசியல் தலையெழுத்தை நிரந்தரமாக தீர்மானிக்கின்ற சக்திகளாக கிழக்கு மாகாண தமிழ்பேசும் மக்கள் திகழ முடியும் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.



திருகோணமலை மாவட்டத்தில் கௌரவ அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மீளக் குடியமர்வு மாதிரிக் கிராமத்திற்கான சந்தையை கௌரவ அமைச்சர் அவர்கள் திறந்து வைக்கின்றார்.

## புதிய தலைமைத்துவத்தை அடையாளம் காணுங்கள்.

இந்த வரலாற்றுப் பின்னணியிலிருந்து நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்த சிந்தனையினூடாக தமிழ் மக்களை அம்பாறை மாவட்டத்தில் வழிநடத்தக்கூடிய தலைமைத்துவங்களை நீங்கள் அடையாளம் காண வேண்டும். அத்தகைய தலைமைத்துவங்களுக்கு நீங்கள் உங்களது முழு ஆதரவினையும் வழங்க வேண்டும். தமிழ், முஸ்லிம் சமூகம் என்றும் இந்த மண்ணில் பிரிந்து வாழக்கூடாது. பிரிவினையை விதைக்கின்ற சக்திகளை நீங்கள் அடையாளம் காண வேண்டும். அத்தகைய சக்திகளை ஒதுக்குவதற்கு நீங்கள் தயங்கக்கூடாது.

## முன்னேற்றகரமான தீர்வு!

இன்று இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பாக அரசாங்கத்தினால் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்வைப் பற்றி பலர் பலவாறாக விமர்சித்த போதிலும், இந்தநாட்டின் அரசியல் வரலாற்றில் முன்வைக்கப்பட்ட தீர்வுகளில் இது ஒரு முன்னேற்றகரமான தீர்வு என்பதனை நீங்கள் மறக்கக்கூடாது. இத்தகைய தீர்வை இந்த நாட்டின் அரசியல் தலைமைத்துவமாக விளங்குகின்ற ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் மிகத் துணிச்சலுடன் பேரினவாதிகளின் எரிச்சலுக்கும் புகைச்சலுக்கும் மத்தியில் முன்வைத்துள்ளதோடு, இந்த தீர்வில் இருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டேன் என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

## நாட்டின் புதிய தலைமைத்துவம்.

கடந்த கால வரலாற்றை நீங்கள் திரும்பிப் பாருங்கள். அன்று தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக பண்டா - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்ட போது, அந்த ஒப்பந்தத்தினை இந்த நாட்டு மக்கள் முன் அமுல் நடத்த அன்றைய தலைவர்கள் தயக்கம் காட்டினார்கள். அவ்வாறே டட்லி சேனநாயக்க அவர்களின் தீர்வு வெள்ளையறிக்கையாக முன்வைக்கப்பட்டது. பின்னர் அதையும் கூட அமுல் நடத்த அவர் பின்வாங்கினார். ஆனால், இன்றைய எமது ஜனாதிபதி அத்தகைய பாரம்பரியங்களிலிருந்தும் கோழைத்தனத்திலிருந்தும் விடுபட்ட


ஒருவராவர். தனது உயிரைக்கூட பணயம் வைத்து இந்நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்ற இலட்சியத்துடன் இத்தீர்வுத்திட்டத்தை முன்வைத்து அதனை செயலுருவில் கொண்டு வருவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

## முஸ்லிம் பெரும்பான்மைச் சபை.

இன்று இப்பிரச்சினைக்குத் தீர்வாக பிராந்திய சபைகள் பற்றிப் பேசப்படுகின்றது. இத்தகைய பிராந்திய சபைகளின் எல்லைகள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. என்றாலும் பிராந்திய சபைகள் என்ற கோட்பாடு நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகி விட்டது. இத்தகைய பிராந்திய சபைகளில் முஸ்லிம்களுக்கென்ற பிராந்திய சபையும் மறுக்கப்பட முடியாத கோரிக்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இன்று அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கரையோரத் தொகுதிகளான கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை தொகுதிகளை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய சபையை முஸ்லிம்களுக்கு வழங்க தமிழ்கட்சிகள் கூட தயாராக இருக்கின்றன. ஆனால் மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ். மாவட்டங்களில் உள்ள நிலத்தொடர்பற்ற பிரதேசங்களை முஸ்லிம்களின் பிராந்திய சபையுடன் இணைக்கப்படுவதில் தமிழ்கட்சிகள் தயக்கம் காட்டுகின்றன.

## முஸ்லிம் பெரும் பான்மை சபைக்குள் தமிழ் மக்களின் எதிர்காலம்!

அவ்வாறு இப்பிரதேசங்களை அடிப்படை யாகக் கொண்டு பிராந்திய சபையொன்று ஏற்படுமாயின் இப்பிரதேசங்களில் வாழுகின்ற தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன? இவர்கள் பிரிந்து செல்வதா? அல்லது இடம்பெயர்ந்து செல்வதா? இவைகள் எதுவுமே உரிய பதிலாக அமையாது. அவர்கள் அம்பாறை மாவட்ட முஸ்லிம்களோடு ஒற்றுமையாக வாழ முன்வர வேண்டும். அவர்கள் எக்காரணம் கொண்டும்பிரிந்து வாழ முடியாது. அவ்வாறு பிரிந்து வாழ நினைப்பது எமது மண்ணை நாமே பேரினவாதிகளுக்கு விலை பேசுகின்ற கதையாகவும் நமது ஒற்றுமையின்மையே எம்மை அழிக்கின்ற ஆயுதமாகவும் பேரின வாதிகளுக்குச் சாதகமாக மாற்றமடையலாம்.



கௌரவ அமைச்சரின் அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டத்தின் கீழ் அகதிகள் மீண்டும் சொந்த இடங்களில் சகல வசதிகளுடன் மீளக் குடியமர்த்து ம் திட்டத்தின் முதல் கிராமமான கப்பந்து றை தமிழ் கிராமம் திறந்து வைக்கப்பட்டதையொட்டி கௌரவ அமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு

## தமிழ்மக்கள் எம் சகோதரர்கள்!

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எவரையும் எக்காரணம் கொண்டும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நானோ முஸ்லிம் காங்கிரஸோ பார்க்க மாட்டாது. இந்த மாவட்டத்தில் வாழுகின்ற முஸ்லிம்களுக்குரிய அனைத்து உரிமைகளும் அவர்களுக்கும் வழங்கப்படும். இவ்வாறே யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற முஸ்லிம்கள் பெரும்பான்மைச் சமூகமான அங்குள்ள தமிழ் சமூகத்துடன் ஒற்றுமையாக வாழ வேண்டும். அவர்களது உரிமைகளை தமிழ் சகோதரர்கள் உறுதி செய்ய வேண்டும். இத்தகைய பரஸ்பர உறவுகளின் அடிப்படையிலேயே நாம் நமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

## பரஸ்பர உறவுகள் வேண்டும்.

இத்தகைய உறவுகள் பற்றிய உணர்வுகளை எமது மக்களுக்கு

நாம் போதிக்க வேண்டும். ஆயுதங்களைப் பிடித்து அலைகின்ற கூட்டங்களுக்கு நமது உறவின் அவசியத்தை நமது ஒற்றுமையின் அவசரத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். இதற்காக தமிழ் சகோதரர்கள் தயங்கக்கூடாது. இத்தகைய தமிழ் - முஸ்லிம் உறவின் அவசியத்தை வலியுறுத்துகின்ற போது தமிழ் மக்கள் ஆயுதங்களுக்கு அடிபணியும் சக்தியற்ற வெறும் மனித பிண்டங்களாக இருக்கக்கூடாது. அம்பாறை மாவட்ட வெகுஜன அரசியல் சக்திகளுடன் சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலமே பாதுகாக்கப்பட முடியும்.

## விடுதலைப்புலிகளின் கொலைப்பட்டியல்!

தமிழ் பிரதேசங்களுக்கு என்னை வருகை தருமாறு வற்புறுத்தி அழைத்தமைக்காக நான் உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் இன்றைய அரசியல் சூழ்நிலைகளின் பயங்கரமான நடவடிக்கைகள் பற்றி நீங்கள் அறியாமல் இல்லை. இன்று விடுதலைப்புலிகளின் கொலைப் பட்டியலில் உள்ளவர்களில் மிகவும் சிரேஷ்டமானவன் நான்தான். எனக்கு வழங்கப்பட்ட தண்டனை இன்று நேற்று அல்ல. கடந்த 8 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்ற தண்டனையாகும். இந்த தண்டனையைத் தோளில் சுமந்தவனாகவே எனது இலட்சியப் பயணத்தில் நான் சென்று கொண்டிருக்கின்றேன். ஆனால் ஒன்றை மாத்திரம் எனக்கு உறுதியாகக் கூறிக் கொள்ள முடியும்.

## இறைவன் தீர்மானிக்கும் நாளிலேயே....

பிரபாகரன் தீர்மானிக்கின்ற நாளில் எனது மரணம் நிகழாது. நான் நம்புகின்ற இறைவன் தீர்மானிக்கின்ற நாளிலே எனது மரணம் நிகழும். குண்டுகளுக்கோ வெடிகுண்டுகளுக்கோ அஞ்சுகின்றவன் அல்ல நான். எத்தனையோ தடைகளைத் தாண்டி இன்று உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கின்றேன். இன்று இந்த மண்டபத்தை விட்டு வெளியேறி வீட்டைச் சென்றடைவேனா? என்ற வினாவுக்கு விடை கூற முடியாதிருக்கின்றது. எனது உயிர் மூச்சு இருக்கும் வரையில் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கு நான் என்றும் போராடிக் கொண்டிருப்பேன்.



மீளக் குடியமர்வு கிராமம் தொடர்பான வைபவமொன்றின் போது மக்கள் புடைசூழ அமைச்சர் அஷ்ரப் அழைத்துச் செல்லப்படுகிறார்

## தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி!

தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் கடந்த தலைமைத்துவங்கள் அநியாயங்கள் இழைத்துள்ளது என்பது உண்மையாகும். அவர்களின் பல உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்பதும் உண்மையாகும். அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதும் உண்மையாகும். ஆனால், இதனைப் பெறுவதற்காகப் போராடுவோம் என்று கூறிக்கொண்டு அப்பாவி மக்களையும், அரச சொத்துக்களையும் அழிக்கின்ற பயங்கரவாதத்தை நீங்கள் கண்டிக்க வேண்டும்.

## கோரிக்கையை நிறைவேற்றுவோம்.

இன்று நீங்கள் என்னிடம் தம்பிலுவில் பிரதேசத்தில் காட்டு ஆஸ்பத்திரியில் பாதிக்கப்பட்ட படத்தைக் காட்டினீர்கள். இந்தப் படத்தைப் பார்த்த போது இந்த கட்டிடத்தில் பல குண்டுகளும், துப்பாக்கி ரவைகளும்,

கிரனைட் குண்டுகளும் தாக்கி சேதப்பட்ட சேதங்களையே காண முடிந்தது. இந்தக் கட்டிடத்தைப் புனரமைப்பதற்காக நீங்கள் நிதியுதவி கோரினீர்கள். அதற்கான நிதியுதவியினைப் பூரணமாக வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

## ஒரேயொரு கேள்வி.


ஆனால், ஒரேயொரு கேள்வி மாத்திரம் என்னுள் எழுகின்றது. ஏழை மக்களுக்கு வைத்திய சேவையை வழங்கி வந்த இந்தக் கட்டிடம் செய்த குற்றம் என்ன? ஏன் இந்தக் கட்டிடம் குண்டுகளாலும், கிரணைட்டுக்களாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

## அபிவிருத்தி சபைகள்.

இன்றைய சந்திப்பின் மிகப் பிரதானமான நோக்கம், தமிழ் பிரதேசங்களில் பிரதேச அபிவிருத்தி சபைகளை உருவாக்கி, அதன் மூலமே அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். முஸ்லிம் பிரதேசங்களில் இத்தகைய சபைகள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகின்றது. இப்பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள், புனரமைப்புப் பணிகள், தொழில் வாய்ப்புக்கள், பொநுநல வசதிகள் இனங்காணப்பட்டு, இச்சபைகளின் சிபாரிசின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

## அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் என்ற வகையில் நானே அதிகாரத்தை வைத்திராமல் எனது அதிகாரங்கள் முழுவதையும் மக்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கியிருக்கின்றேன். அந்தந்தப் பிரதேசங்களில் அபிவிருத்தியை நான் கொழும்பிலிருந்து கொண்டு முடிவெடுப்பதில்லை. அந்தப் பிரதேச மக்கள் அவர்களின் அவசரமானதும் அவசியமானதுமான அபிவிருத்திகளை இனங்காண வேண்டும். இதற்காகவே பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. இவை அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களுக்கு மாத்திரமன்றி மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, மன்னார் போன்ற பிரதேசங்களிலும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



திருகோணமலை மாவட்டத்தில் கப்பற்துறை மீளக் குடியமர்வு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலையை கௌரவ அமைச்சர் அவர்கள் திறந்து வைக்கின்றார். பிரதி அமைச்சர் மகிந்த விஜேசேகர, மற்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. தங்கதுறை ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## குற்றஞ்சாட்டில் உண்மையில்லை.

அவ்வப் பிரதேச தமிழ் மக்கள் உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் ஒன்றுகூடி இத்தகைய அபிவிருத்தி சபைகளை ஏற்படுத்த முன்வர வேண்டும். இன்று எனது பணிகளில் சிலர் குறை காணத்தொடங்கியதோடு மட்டுமல்லாது, இனவாதப்போக்கில் சில விஷமத்தனமான பிரசாரங்களையும் செய்து வருகின்றனர். அதாவது, முஸ்லிம் பகுதிகளுக்குப் பலகோடி ரூபாய்கள் ஒதுக்கப்படுவதாகவும், தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்படுவதில்லை எனவும் குறைகாணத் தொடங்கியுள்ளனர். இதில் எவ்வித உண்மையுமில்லை. விரைவில் சரியான புள்ளி விபரங்களையும், அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்களையும் பற்றி விரிவான அறிக்கையொன்று பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இந்த அபிவிருத்தித் திட்டங்களில் மிகக் கூடிய நிதியை தமிழ் பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.

## ஆறு தமிழ் மாதிரிக்கிராமங்கள்!

மக்களை மீளக் குடியமர்த்தும் நோக்குடன் அம்பாறை மாவட்டத்தில் எமது அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட ஆறு மாதிரிக் கிராமங்கள் தமிழ்க் கிராமங்களாகும். இந்த மாதிரிக் கிராமங்களில் ஆகக் கூடிய பணம் கண்ணகி மாதிரிக் கிராமத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அவ்வாறே பல கோடிக்கணக்கான ரூபா தமிழ் கிராமங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்குச் சாட்சியாளர்களாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

## தமிழ்மகன் கேட்ட எந்த உதவியையும் மறுத்ததில்லை.

எந்தவொரு தமிழ் மகனும் என்னிடம் உதவி கேட்டு நான் மறுத்ததாகக் கூறமுடியாது. தமிழ் சமூகமும் முஸ்லிம் சமூகமும் எனது இரண்டு கண்கள் என்ற கொள்கையுடன் நான் செயற்பட்டு வருகின்றேன். எனது பணிகள், எனது சிந்தனைகள், எனது செயற்பாடுகள் எதிலும் அணுவளவேனும் இனவாதம், மதவாதம் இல்லை. மனித நேயம் எனும் உள்ளுணர்வே எப்போதும் என்னை வழிநடத்திச் செல்லுகின்றது.

## தமிழ்,முஸ்லிம் சமூகங்கள் ஆயத்தமாக வேண்டும்!

இன்று எமது பிரதேசத்தில் நான் மேற்கொண்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் கடந்த 40 வருட காலமாக எமக்கு மறுக்கப்பட்ட அபிவிருத்திகளாகும். கடந்த 40 வருடங்களாக எம்மைப் பிரதிநிதித்துவம் செய்தவர்கள் வாய்மூடி மௌனியாகவே இருந்த காரணத்தினால் நாம் அபிவிருத்தியில் தூக்கியெறியப்பட்டோம். இன்று அந்த அபிவிருத்தி இடைவெளிகளை நிரப்புவதற்கு சாதகமான சூழல் அமைந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஆயத்தமாக வேண்டும். இந்த ஒற்றுமையின் அடிப்படையில் நாம் ஒன்று கூடுவோம். அதன் மூலம்; இந்த மண்ணை சமாதானத்தின் சின்னமாகப் பிரகடனப்படுத்துவோம்.

